# சென்னை மாநகராட்சி

## ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்

ஆண்டு சந்தா ரூ. 2,000/-

மலர் : 20 இதழ் : 1058 நாள் : 27 – 11 – 2014

வ.அ.(தெ).தி.க.மே.ந.க.எண்.அ4 / 356 / 2014

சென்னை மாநகராட்சி
வட்டார அலுவலகம்(தெற்கு)
திடக்கழிவு மேலாண்மைத் துறை

**மறு– மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிக்கை**

**கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் திடக்கழிவு மேலாண்மைத் (தெற்கு) வட்டார அலுவலகம் துறை அவர்களால் கோரப்படுகிறது.**

சென்னை மாநகராட்சியில் கீழ்காணும் பணிக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் (e.Submission) திடக்கழிவு மேலாண்மை துறை, தெற்கு வட்டார அலுவலகம் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் **11.12.2014 தேதி பிற்பகல் 3.00 மணி வரை** தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும். பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் வருகை தரும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் அன்றே **3.30 மணியளவில்** கணினி மூலம் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கவோ, நிராகரிக்கவோ அல்லது ரத்து செய்யவோ ஒப்பம் கோரும் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. வேலைப்பற்றிய இதர விவரங்களை அலுவலக வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் கேட்டுத் தெரிந்துக்கொள்ளலாம். வேலைக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிப்படிவத்தை **11.12.2014 தேதி பிற்பகல் மாலை 3.00 மணிக்குள்** https://tntenders.gov.in என்ற வலை தளத்திலிருந்து இலவசமாக Digital Signature card/e.token பயன்படுத்தி ஒப்பம் சமர்பிக்க வேண்டும். மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி மின்னணு முறையில் கணினி மூலமாக மட்டுமே (e.submission) பெற்றுக் கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிக்கான முன்வைப்புத் தொகைக்கான வரைவோலை ஸ்கேன் செய்து ஒப்பந்தப்புள்ளியுடன் கணினி மூலம் ஏற்றப்படல் வேண்டும். வேலைக்கான முன்வைப்புத் தொகைக்கான அசல் வரைவோலை இதர ஆவணங்கள் **11.12.2014 அன்று பிற்பகல் 3.00 மணிக்குள்** மேற்பார்வை பொறியாளர், திடக்கழிவு மேலாண்மை துறை / இயந்திரம் / நகர அமைப்பு, தெற்கு வட்டார அலுவலகம். எண்.15 டாக்டர் முத்துலட்சுமி சாலை, அடையாறு சென்னை–20 அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

| வ. எண் | கோப்பு எண் பணியின் விவரம் | பணியின் மதிப்பு | முன் வைப்புத் தொகை | ஒப்பந்ததாரர் பதிவு நிலை |
|---|---|---|---|---|
| 1. | **வ.அ.(தெ).தி.க.மே.ந.க.எண்.அ4 / 356 / 2014**<br>1100 லிட்டர் கொள்ளலவு கொண்ட மூடியுடன் கூடிய காம்பாக்டர் குப்பை தொட்டி DIN/EN 840 தரத்தில் 250 எண்ணிக்கையில் மண்டலம்–11,12 14, மற்றும் 15க்கு கொள்முதல் செய்வதற்கான ஒப்பம் | 42.50 | 42,500 | வகுப்பு–2 |

ஒப்பந்ததாரர்கள் தங்கள் DSC டோக்கனை http://tntenders/gov.in என்ற வலை தளத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

**மேற்பார்வை பொறியாளர் (தி.க.மே/இ/ந/அ)**